DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | உமா | Village | ஆசிரியர் நகர் |
| Husband's Name | மகேந்திரன் | Taluk | வாணியம்பாடி |
| Age | 57 | Calling | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **13.02.2026**

**O.S. No. 111/2023** **வா.சா.1** **01.23 PM – 01.50 PM**

**முதல் விசாரணை தொடர்ச்சி –**

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு தற்போது ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஆஜர்.

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.1** | : | வாதி ரேஷன் பெறுவதற்கான உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை வழங்கப்படும் மின்னனு அட்டை விவரங்கள் கணினி பதிவிறக்கம். |
| **வா.சா.ஆ.2** | : | பிரதிவாதி வழங்கிய சொத்து வரி பொது சீராய்வு அறிவிப்பு கணினி பதிவிறக்கம். |
| **வா.சா.ஆ.3** | : | 31.01.2017 தேதி பதிவு செய்யப்பட்ட 28.01.2017ம் தேதி மகேந்திரன் என்பவர் இறந்ததற்கான இறப்பு சான்றிட்ட நகல். |
| **வா.சா.ஆ.4** | : | வெங்கடேசன் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல். |
| **வா.சா.ஆ.5** | : | விஸ்வநாதன் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல். |
| **வா.சா.ஆ.6** | : | வெங்கடேசன் என்பவரின் வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல். |
| **வா.சா.ஆ.7** | : | உமா என்பவரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல். |
| **வா.சா.ஆ.8** | : | ரமேஷ் என்பவரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல். |
| **வா.சா.ஆ.9** | : | வாதியின் கணவர் மகேந்திரன் பெயரில் உள்ள சொத்து வரி ரசீதுகள் அசலுடன் (15 எண்ணிக்கை). |

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.10** | : | வாதியின் கணவர் மகேந்திரன் பெயரில் உள்ள குடிநீர் வரி ரசீதுகள் அசலுடன் (14 எண்ணிக்கை). |
| **வா.சா.ஆ.11** | : | முத்தம்மாள் என்பவரின் பெயரில் உள்ள மின்கட்டண ரசீதுகள் அசலுடன் (33 எண்ணிக்கை). |
| **வா.சா.ஆ.12** | : | முத்தம்மாள் என்பவரின் பெயரில் உள்ள பழைய மின்சார அட்டை (பழைய எண் 8067/F18/730) (2 அட்டை). |
| **வா.சா.ஆ.13** | : | முத்தம்மாள் என்பவரின் பெயரில் உள்ள புதிய மின்சார அட்டை (புதிய எண் 422– 101– 78) (5 எண்ணிக்கை). |
| **வா.சா.ஆ.14** | : | வாதியின் கணவர் மகேந்திரன் பெயரில் உள்ள சொத்து வரி செலுத்தியதற்கான ரசீதுகள் (5 எண்ணிக்கை). |
| **வா.சா.ஆ.15** | : | 25.09.2023 தேதியிட்ட பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய 1998–ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு 128ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பு (ந.க.எண்.1594/2023/எப்1) அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல். |

<u>குறுக்கு விசாரணை–</u>

1. வழக்கில் சொல்லியுள்ள சொத்தின் விவரம் ஆற்று கால்வாய் பகுதி என்றால் சரிதான். அந்த ஆற்று கால்வாயில் தான் என்னுடைய இடம் மற்றும் அதை சேர்த்து தான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். சட்டத்தற்கு விரோதமாக நகராட்சி காலி செய்யக்கூடாது என்பதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முத்தம்மான் என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய மாமியார் ஆவார். மேற்படி முத்தம்மாள் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார் என்று நான் கூறுவதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளனர் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்படி முத்தம்மாள் இறந்து எத்தனை வருடம் ஆகிறது என்றால் சுமார் 35 வருடம் இருக்கும். மேற்படி முத்துமாளின் வாரிசுதாரர் தான் என் கணவர் மகேந்திரன் என்றால் சரிதான். மேற்படி என்னுடைய மாமியார் இறந்த பின்பு என்னுடைய கணவர் தான் சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார் என்றால் சரிதான். என்னுடைய கணவர் தான் சுவாதீனத்தில் இருந்தார் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. என்னுடைய கணவர் இறந்து எத்தனை வருடம் ஆகிறது என்றால் சுமார் எட்டு வருடம் ஆகிறது. என்னுடைய கணவர் இறப்பிற்கு பின்னிட்டு வழக்கு சொத்தில் நான் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய பிள்ளைகள் மற்றும் மருமகள்கள் எங்கு உள்ளனர் என்றால் என்னுடைய பையனும் மருமகளும் சென்னையில் வசிக்கின்றனர். என்னுடைய கணவர் இறப்பிற்கு பின்னர் நான் சுவாதீனத்தில் இருப்பதற்கான ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். 07.10.2023 தேதி நகராட்சியிடம் இருந்து அறிவிப்பு வந்ததன் பின்னர் எத்தனை நாட்களுக்கு கழித்து அளவீடு செய்தார்கள் என்றால் நோட்டீஸ் வழங்குவதற்கு முன்னர் அளவீடு செய்தார்கள் பின்னர் நோட்டீஸ் வழங்கினார்கள்.

4. 25.09.2023 தேதி முறையாக வழக்கு சொத்தை காலி செய்யுமாறு எனக்கு ஏழு நாட்கள் கால அவகாசத்துடன் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றாலும் நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சி மறுக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டு நகராட்சியில் இருந்து என்னை காலி செய்யுமாறு எவரும் கட்டாயப்படுத்த வில்லை என்றால் சரிதான்.

5. வாணியம்பாடி நகராட்சி அரசாங்கத்தின் உத்தரவுக்கிணங்க முறையாக எனக்கு நோட்டீஸ் அனுப்பி காலி செய்ய கூறினார்கள் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

***பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.